[29th February 1964

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : 1958-ம் ஆண்டிலே இந்தத் திட்டம் சாங்ஷன் செய்யப்பட்டது. ஆயிரம் ஏக்கராக்களுக்குத் தண்ணீர் கொடுக்கும் திட்டம் ஆதலால், இதைப் பார்த்துப் பரிசீலனை செய்து நிறைவேற்ற வேண்டியிருந்தது.

பாக்கம் ஏரிக்கு நீர் விடுதல்

*120 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலூகாவிலுள்ள பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவர அணை கட்டும் வேலை என்ன நிலையிலுள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவர அணைக்கட்டு கட்டும் உத்தேசமில்லை, ஆனால், அதற்குப் பதிலாகப் பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் சப்ளையை அபிவிருத்தி செய்ய அடியிற்கண்ட மூன்று வேலைகளை தலைமைப் பொறியாளர் (பாசன) மேற்கொண்டுள்ளார் :—

(1) வரவு வாய்க்காலுக்கு விசேஷ மராமத்துக்கள் செய்தல் (இவை ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுவிட்டன.)

(2) வரவு வாய்க்காலின் ஆரம்ப இடத்தை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

(3) இவ்வாய்க்காலில் இன்னொரு பாதையை அமைத்தல்.

There is no proposal for the construction of an anicut for the purpose referred to but instead the following three works have been undertaken by the Chief Engineer (Irrigation) for improving water-supply to the Pakkam tank.

(1) Special repairs to the supply channel (already completed.)

(2) Shifting the off-take point of the supply channel.

(3) Construction of a super passage in the channel.

MR. SPEAKER : Questions are over.

II—POINT OF ORDER *re* QUESTION HOUR.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார். சட்டசபை நடவடிக்கைகளில் கேள்வி நேரம் மிக முக்கியமானது. அதைத் தாங்களும் அறிவீர்கள் . . . .

MR. SPEAKER : Let the hon. Member come to the point of order.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பல மாதங்களுக்கு முன்பாகவே நாங்கள் கேள்விகளுக்கு அறிவிப்புக் கொடுத்திருந்தும், அவற்றுக்குப் பதில்களைப் பெற்று, தகுந்த எண்ணிக்கையில் கேள்வி நேரத்

29th February 1964]

தின்போது எடுத்துக்கொள்ளவில்லை இன்றையதினம் பத்துப் பன்னிரண்டு நிமிஷங்களுக்குள் கேள்வி நேரம் முடிந்துவிட்டது. கேள்வி நேரத்திற்கு ஏற்றாற்போல் கேள்விகள் பதிலளிக்கப்படு வதற்குச் சபை முன் வராததற்குக் காரணம் என்ன? கேள்வி களுக்கு விரைவில் பதில் தயாரித்து, சபை முன் வருவதற்குத் தாங்கள் . . . .

MR. SPEAKER : It is not a point of order.

THE HON. SRI R. VENKATARAMAN : It is a point of disorder.

MR. SPEAKER : Yes, it is a point of disorder Let the hon. Member please state what his point of order is.

SRI V. KRISHNAMOORTHY : Sir, the point of order is that the full one hour allotted for questions and answers has not been utilised for that purpose and the Departments are not supplying answers expeditiously.

MR. SPEAKER : It is not a point of order.

III—BUDGET FOR 1964-65—PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம்:

கனம் சபாநாயகர் அவர்களே,

முன்னுரை.

1964-65-ம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையைச் சபை முன்பு சமர்ப்பிக்கின்றேன்*. 1962-63-ம் ஆண்டின் கணக்குகளும் நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் சபை முன் வைக் கப்பட்டுள்ளன. சீன ஆக்கிரமிப்பின் விளைவால் ஏற்பட்ட அவ சரச் சூழ் நிலையில் எனது முன்னைய வரவு-செலவுத் திட்டத்தை நான் உங்கள் முன்னர் வைத்தேன். அத்திட்டத்தில் நமது மாநிலத்தின் வருவாயிலும், செலவினங்களிலும் அவசர காலத்தின் அதிர்ச்சி ஓரளவு பிரதிபலித்திருந்ததைக் கண்டிருக்கலாம். அவசரகால நெருக்கடியை யொட்டி, 1962-63-ம் ஆண்டில் திட்ட வேலைகளுக்காக எவ்வளவு உதவித் தொகை அளிக்கப்பட்டதோ, சற்றேறக்குறைய அதே அளவிற்குத் தான் 1963-64-ம் ஆண்டிற்கும் மத்திய உதவித் தொகை யளிக்கப் படும் என்ற மத்திய அரசாங்கத்தின் முடிவு, நமது நிதி வசதி களை ஓரளவு பாதித்தது. ஆனால் அதே நேரத்தில் உள் நாட்டுப் பாதுகாப்பையும் பொது நிர்வாகத்தையும் பலப்படுத்துவதற் காகச் சில கூடுதல் பொறுப்புகளை மாநில அரசாங்கம் ஏற்க வேண்டியிருந்தது. போலீஸ் படையினரை, அதுவும் முக்கிய மாக ஆயுதம் ஏந்திய போலீஸ் படையினரை பலப்படுத்து வதற்காக அதிகப் பணம் ஒதுக்க வேண்டியிருந்தது. ஊர்க்

---

* Printed as Appendices I to IV on pages 200–222 infra (in Tamil).
Printed as Appendices I to IV on pages 223–257 infra (in English).